Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2024 தை 08 (21-01-1993) வியாழக்கிழமை ஓசை 338

## மூதூர்-பாட்டாளிபுரத்தில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

இந்திய அரசின் நாசகாரச் சதியால் வங்கக்கடலில் வீரச்சாவடைந்த மூத்த தளபதி கேணல் கிட்டுவுக்கும் ஏனைய ஒன்பது போராளிகளுக்கும் மரியாதை செலுத்தும் முகமாக நேற்று மூதூர் பாட்டாளி புரத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது. இம் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர் ஊர்வலத்தில் இந்திய அரசிற்கும், தமிழ் நாட்டின் ஜெயலலிதா அரசிற்கும் எதிராகக் கோஷங்களைஎழுப்பியவாறு சென்றனர். இவ்வூர்வலத்தின் முடிவில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் கொடும்பாவியும், ஜெயலலிதாவின் கொடும்பாவியும் எரியூட்டப்பட்டன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மலர் வளையம் வைத்து தலைவர் அஞ்சலி;
# திருவிலில் அணி திரண்ட மக்கள் சமுத்திரம்

## வீரச்சாவைத் தழுவிய போராளிகள் குடும்பங்களுக்கு தலைவர் ஆறுதல்

(திருவில்)

மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது மாவீரர்களுக்கும் தேசியத் தலைவர் பிரபாகரன் தனது அஞ்சலியைச் செலுத்தினார். திருவிலில் நேற்று மாலை இடம்பெற்ற நினைவுக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டபோதே தலைவர் பிரபாகரன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் இதேவேளை, நெல்லியடியில் இருந்து பேரணியாக வந்திருந்த இலட்சக்கணக்கான தமிழீழ மக்களும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

திருவில் திடலுக்கு மாலை 5.40 மணிக்கு வருகை தந்த தலைவர் வே. பிரபாகரன் மாவீரர்களுக்கு மலர் வளையம் வைத்து வீரவணக்கம் செலுத்தினார். விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவினது ஏனைய ஒன்பது மாவீரர்களினதும் உருவப்படங்கள் இம்மலர் வளையத்தில் காணப்பட்டன கேணல் கிட்டுவினது தாயாருக்கும் மனைவிக்கும் ஏனைய ஒன்பது மாவீரர்களினது பெற்றோருக்கும்

(5 ஆம் பக்கம் பார்க்க)



தளபதி கேணல் கிட்டுவிற்கும் ஏனைய ஒன்பது மாவீரர்களுக்கும் மரியாதை செலுத்துமுகமாக நேற்று திருவில் மைதானத்தில் தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதை காணலாம்.

# ராணுவ அணிவகுப்பு, கப்பல் ஊர்தி; ஐந்து மைல்கள் நீண்ட பேரணி

(யாழ்ப்பாணம்)

விடுதலை புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களுக்கும் மரியாதை செய்யும் பேரணி நேற்று நெல்லியடி மிலலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து திருவில் திடலில் முடிவுற்றது. இப்பேரணியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணர்வு பூர்வமாக

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் பாண்ட் வாத்தியக் குழு முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து கடற்புலிகளினதும், யாழ். மாவட்டத்தாக்குதற் பிரிவினதும் அணிவகுப்பு சென்றது. இதனையடுத்து மூத்த தளபதி கேணல் கிட்டுவின் முழு அளவிலான உருவப்படமும் மற்றும்


படங்களும் அவர்கள் இறுதியாகப் பயணம் செய்த எம். கே. அகத் மாதிரிக் கப்பலும் வைக்கப்பட்ட ஊர்தியும் சென்றது.

இவ் ஊர்தியின் பின்னால் ஒருலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பதாதைகளையும் கேணல் கிட்டுவின் உருவப் படங்களையும், கறுப்புக்

கோசங்களை எழுப்பியவாறு சென்று கொண்டிருந்தனர்.


நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் ஊர்வலம் நெல்லியடி மில்லர் மகா வித்தியாலயத்திலிருந்து ஏறத்தாழ ஐந்து மைல்தூரத்திலுள்ள திருவில் திடலைச் சென்றடைந்தது.

நெல்லியடியில் ஆரம்பமான



5.40 மணிக்கு வருகை தந்த தலைவர் வே. பிரபாகரன் மாவீரர்களுக்கு மலர் வளை செலுத்தினார். விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவினது ஏனைய உருவப்படங்கள் இம்மலர் வளையத்தில் காணப்பட்டன கேணல் கிட்டுவினது ஏனைய ஒன்பது மாவீரர்களினது பெற்றோருக்கும்

( 5 ஆம் பக்கம் பார்க்க )



# ராணுவ அணிவகுப்பு, கப்பல் ஊர்தி; ஐந்து மைல்கள் நீண்ட பேரணி

(யாழ்ப்பாணம்)

விடுதலை புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களுக்கும் மரியாதை செய்யும் பேரணி நேற்று நெல்லியடி மில்லர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து திருவில் திடலில் முடிவுற்றது. இப்பேரணியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் பாண்ட் வாத்தியக் குழு முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து கடற்புலிகளினதும், யாழ். மாவட்ட தாக்குதற் பிரிவினதும் அணிவகுப்பு சென்றது. இதனையடுத்து மூத்த தளபதி கேணல் கிட்டுவின் முழு அளவிலான உருவப் படமும் மற்றும் ஒன்பது போராளிகளினதும் உருவப் படங்களும் அவர்கள் இறுதியாகப் பயணம் செய்த எம். கே. அகத் மாதிரிக் கப்பலும் வைக்கப்பட்ட ஊர்தியும் சென்றது.

இவ் ஊர்தியின் பின்னால் ஒருலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பதாதைகளையும் கேணல் கிட்டுவின் உருவப் படங்களையும், கறுப்புக் கொடிகளையும் ஏந்தியவாறு இந்திய அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு சென்று கொண்டிருந்தனர்.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் ஊர்வலம் நெல்லியடி மில்லர் மகா வித்தியாலயத்திலிருந்து ஏறத்தாழ ஐந்து மைல்தூரத்திலுள்ள திருவில் திடலைச் சென்றடைந்தது.

நெல்லியடியில் ஆரம்பமான இவ் ஊர்வலம் வதிரிசந்தி ஊடாக உடுப்பிட்டிச் சந்தி, வல்வெட்டித்துறை திருவிலை 5.30 மணியளவில் வந்தடைந்தது.

## சனநெரிசலால் 25 பேர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

திருவிலில் நேற்று ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட மாபெ

[5 ஆம் பக்கம் பார்க்க]

தளபதி கேணல் கிட்டுவிற்கும் ஏனைய ஒன்பது மாவீரர்களுக்கும் மரியாதை செலுத்துமுகமாக நேற்று திருவில் மைதானத்தில் தமிழீழ தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவதை காணலாம்.



தளபதி சேணல் கிட்டுவின் தாயாருக்கு தலைவர் பிரபாகரன் ஆறுதல் கூறுவதையும், அருகில் தளபதி கிட்டுவின் சகோதரரும், தளபதியின் மனைவியும் நிற்பதையும் காணலாம்.

# இந்தியாவிற்கு எதிராக மக்கள் கோஷம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியிலிருந்து நேற்று மூத்த தளபதி கேணல் கிட்டுவிற்கும் ஏனைய ஒன்பதுமாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இடம்பெற்ற கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந்திய அரசிற்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

''இந்திய அரசே குண்டு போடும் பிரேமாவிற்கு முண்டு கொடுக்கிறாயா?'', ''நரசிம்மராவ் ஆட்சியா? நரபலி ஆட்சியா?'' கடலிலே கிட்டுவைக் கொன்றாய். தரையிலே காந்தியத்தைக் கொன்றாய்'', ''பட்டினி போடும் சிறிலங்காவிற்கு பக்கத்துணையா நீ?'', ''கிட்டுவைக் கொன்று பெரும் பழி ஏற்றாய், வேங்கைகள் யாரென்று விரைவில் நீ அறிவாய்'', ''வேங்கைகளோடு பகைத்துவிட்டாய் வேரோடு சாவாய்'', ''வேங்கைகள் உயிரென்ன அறுவடைப் பயிரா?'' ''புலியோடு விளையாடாதே பூண்டோடு அழிவாய்'', இந்தியாவே உன் அகோர ஏகாதிபத்திய பசிக்கு தமிழரா இரை?'' ''இந்திய ஏகாதிபத்தியமே இன்னும் உன் பசி அடங்கவில்லையா?'' என்பன போன்ற கோஷங்களை மக்கள் உணர்ச்சியுடன் எழுப்பிச் சென்றார்கள்

## தளபதி கிட்டுவின் உருவப்படம்

மூத்த தளபதி கேணல்கிட்டுவின்வர்ணப் படமொன்று இன்றைய ஈழநாதம பத்திரிகையுடன் இலவச இணைப்பாக வெளி வருகிறது தவறாது பெற்றுக் கொள்ளவும்

# தலைவரை சந்தித்ததை பாக்கியமாக கருதுகிறோம்

## மாவீரரின் பெற்றோர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)


திருவில் திடலில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் தளபதி சேணல் கிட்டு. மற்றும் ஒன்பது போராளிகளினதும் பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் எமது நிருபர் அவர்களில் சிலரை சந்தித்து உரையாடிய போது; ''தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்தமையை எமது பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம். எமது பிள்ளை எம்மை தலைநிமிர வைத்துவிட்டான். இதன் மூலம் அவனைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய தன் பேறைப் பெற்றுவிட்டோம்'' என கடற்புலி லெப்டினன்ட் அமுதனின் தந்தை மரியநாயகம் அலோசியஸ், தாய் மொனிக்கா அம்மா ஆகியோர் தெரிவித்தார்கள்.

''இவ்வாறு நான் தலைவரிடமும் கூறினேன். அப்போது தலைவர், இப்படியான ஒரு தந்தையைச் சந்திக்கும் நான் தான் பாக்கியம் செய்தவன் என்று தெரிவித்தார்'' என அவர் மேலும் கூறினார்.

''கடந்த ஐப்பசி மாதம் எனது மகன் என்னைச் சந்தித்தார் தான் தரையிலேயோ கடலிலேயோ வீரச்சாவு அடைய நேர்ந்தால், தனது கண்ணை ஒரு போராளிக்கு தானமாக வழங்கும்படி ஒரு கடிதம் எழுதி தலைவருக்கு அனுப்பிவிட்டு சென்றார். ஆனால் அவனுடைய இறுதி ஆசையை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. அவனுடைய இறுதி ஆசை நிறைவேறியிருந்தால் நான் பெருமைப்பட்டிருப்பேன். இதனை நான் தலைவருக்கும் தெரிவித்தேன் அவர் இதனையிட்டு கவலைப்பட்டார். ஆனால்

[6 ஆம் பக்கம் பார்க்க]



இந்தியாவின் நயவஞ்சகச் சதிக்குப் பலியாகிய தளபதி கேணல் கிட்டு மற்றும் ஒன்பது மாவீரர்களுக்கு "மரியாதை செலுத்தும்" நிகழ்வில் வெள்ளமெனத் திரண்டிருந்த மக்களின் ஒரு பகுதியினரை காணலாம்.

### பாகிஸ்தான் அணுகுண்டை விட

# பிரபாகரனின் மன உறுதிக்கு இந்தியா அஞ்சுகின்றது

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

சமாதான முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபடுவதை இந்தியா விரும்பவில்லை. இப்பிராந்தியத்தில் ஐரோப்பிய நாடுகளின் தலையீடு தனது ஆதிக்கத்தைப் பாதிக்கும் என இந்தியா அஞ்சியது. இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்ப வேண்டும் என இந்தியா திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில்தான் கிட்டுவை நிக்கோபர் தீவுகளுக்கு அப்பால், சர்வதேச எல்லைப் பரப்பில் வைத்து கிட்டுவின் கப்பலை இந்தியா பிடித்தது இவ்வாறு நேற்று திருவிலில் நடந்த கேணல் கிட்டு மற்றும் ஒன்பது போராளிகளின் நினைவுக்கல் நாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும் அவர் ஐரோப்பிய சமாதான முயற்சியில் இருந்த

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள எம்மை நாடுங்கள். [சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு] தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, [வானவில் கூல்பார் அருகாமையில்] யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. [சி-5795]

### கலண்டர்கள் விற்பனைக்கு

அழகிய படத்துடனான மினி கலண்டர்கள் தொகையாக கொள்வனவு செய்பவர்களுக்கு ரூ 6/-க்கு விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தக சாலை 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4017)


### சோதிடம்

உங்களின் ஜாதகம், கைரேகை, எண்சாத்திரப்படி நிகழவிருக்கும் சம்பவங்களை முன்கூட்டியே அறிய ஆசைப்படுகிறீர்களா? சந்தியுங்கள் வேலணை சோதிடர் V A. சிவராசா 152B, அரசடிறோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். (4115)

### புலமைப்பரிசில் பரீட்சை

வருடாவருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 24-01-93 ஞாயிறு மு.ப 8.00 மு.ப 11.00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4116)

# வீர வணக்கம்





லெப்,கேணல்குட்டிசிறி

மூத்த தளபதி

## கேணல் கிட்டு

உடன்

9 வேங்கைகளுக்கும்

எம் வீர

அஞ்சலிகள் !



மேஜர் வேலன்

எங்கள் மூத்த தளபதியே!
எம் உள்ளம் நிறைந்த இனியவரே!
எண்பதின் மத்தியில் எமது மண்ணை
எமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தவரே!
உங்களின் நினைவிலே நனைகிறோம்!
பிரிவுத் துயரில் வாடுகிறோம்!
புலிவீரர் களநிகழ்வுகளை "களத்தில்" தந்தவரே!
களத்தில் நடப்பவை கலைவடிவமாக்கி
காவியமாக "எரிமலை"யில் வடித்தவரே!
சிற்றுளி கொண்டு ஒப்பிலா சிற்பங்களை
சிறப்பாக செய்திட தற்கால கருத்துக்களை தாமாக
தந்தவரே!

தமிழீழ தேசத்துக்கென்ற தனியான கலைமரபில்
கலைக்கூடம் தந்திடும், படைப்புக்களனைத்தையும்
தமிழர் வாழ்ந்திடும் நாடுகள் யாவிலும்
அறிந்திடச்செய்து
தாயக நினைவுடன்
மண்ணின் நிகழ்வுகளை எண்ணியே வாழ்ந்திட
வழி பல தந்தவரே!
கலைக்கூட நிகழ்வுகளை நேரில் கண்டு களிப்புறமுன்
கடலதில் வந்து காவியமானவரே!
உங்கள் எண்ணங்களை சுமந்து செல்கிறோம்!
பணி அது சிறக்க விரைந்து செல்கின்றோம்.

(சி-5841)

**- தமிழீழ மாவீரர் சிற்பக் கலைக்கூடம்**

## நினைவு கூருகின்றோம்..

### 1993-01-21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளி - மூகத்துவாரம் சிறிலங்கா காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்து, காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1988 ஆம் ஆண்டு அம்பாறை - தாண்டியடிப் பகுதியில் இந்தியப் படையினர் கைது செய்ய முயன்றபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

2ம் லெப். புவி (இளையதம்பி ஆனந்தன் - றொட்டைக்குளம், பொத்துவில்-03-அம்பாறை)

1989 ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். வின்சன் [பரமசாமி ஜெயரூபன் - சரசாலை மத்தி, சாவகச்சேரி-யாழ்ப்பாணம்]

இதே சம்பவத்தின்போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு முள்ளைத்தீவில் வீரச்சாவெய்திய-

லெப். அகிலன் [பொன்னுச்சாமி நற்குணேஸ்வரன்-உதயநகர் கிழக்கு - கிளிநொச்சி]

யாழ்ப்பாணம் - அரியாலை, மணியந்தோட்டம் பகுதியில் தேசவிரோதக் குழுவினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய-

அழகன்-அன்பழகன் [முருகேசு ரவீந்திரன்- தம்பகாமம், இத்தாவில், பளை - கிளிநொச்சி]

ஜீவன் [பிலிப் செல்வராசா - 11, பழைய பூங்கா வீதி, திலீபன் சிற்றூர், குருநகர் - யாழ்ப்பாணம்]

பவான்-பகவான் [துரைசாமி இராஜேந்திரன் - நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி-யாழ்ப்பாணம்]

நரசிம்மன் [ஜெயபாலசிங்கம் விமல்ராஜ் - கடற்கரை வீதி, உதயபுரம், பாஷையூர்-யாழ்ப்பாணம்]

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

மயூரன் [சி. இராமச்சந்திரன் - வீராடுமுனை, பழுகாமம் - மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - பாவற்கொடிச்சேனையில் எதிர்பாராத விதமாகக் குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த -

சுந்தரம் [மாசிலாமணி திருச்செல்வம் - சின்னமுனைக்காடு - மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட, வந்தாறுமூலை, களுவங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வட்டபோட்டமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

திவாகரன்-இகக்குலர் [கந்தசாமி யுதன் - கும்புறுமூலை - மட்டக்களப்பு]

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின்

**மாபெரும் நாடகக் கலைவிழா**

Jaffna College Institute of Technology

Vaddukoddai

வருடாவருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப்பரீட்சை 24-01-93 ஞாயிறு மு.ப 8.00 மு ப 11.00 நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4116)

உங்களை நினைவிலே நினைக்கிறோம்!
பிரிவுத் துயரில் வாடுகிறோம்!
புலிவீரர் களநிகழ்வுகளை "களத்தில்" தந்தவரே!
களத்தில் நடப்பவை கலைவடிவமாக்கி
காவியமாக "எரிமலை"யில் வடித்தவரே!
சிற்றுளி கொண்டு ஒப்பிலா சிற்பங்களை
சிறப்பாக செய்திட தற்கால கருத்துக்களை தாமாக
தந்தவரே!

தாயக நினைவுடன்
மண்ணின் நிகழ்வுகளை எண்ணியே வாழ்ந்திட
வழி பல தந்தவரே!
கலைக்கூட நிகழ்வுகளை நேரில் கண்டு களிப்புறமுன்
கடலதில் வந்து காவியமானவரே!
உங்கள் எண்ணங்களை சுமந்து செல்கிறோம்!
பணி அது சிறக்க விரைந்து செல்கிறோம்.

(சி-5841) **- தமிழீழ மாவீரர் சிற்பக் கலைக்கூடம்**

அரியாலை ஸ்ரீ கலைமகள் நாடக சபாவின்

# மாபெரும் நாடகக்கலைவிழா



இடம்:- அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டு மைதானம்.

காலம்:- 22-01-1993 வெள்ளி இரவு 7-30 மணிக்கு

இந்த மண் எங்களின் சொந்தமண் புகழ் சாந்தன் அரிச்சந்திரனாகவும், நடிக கலாமணி V. செல்வம் சந்திரமதியாகவும், இராமண்ணா சத்தியகீர்த்தியாகவும் இணைந்து வழங்கும் சோக சோபித சொர்ண கவிக்குயில் V. K. இரத்தினத்தின் நெறியாள்கையில்.

## "அரிச்சந்திர மயான காண்டம்"

## புராண நாடகம்

ஆர்மோனியம்:- பிலிப்பு யோன் கபாஸ்

மிருதங்கம்:- மி. வரதன்

அன்பளிப்பு:

பட்டுப் புடைவைகளுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான ஆடைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

"ராசி சில்க்ஸ்" ஆடை அகம்

70, நவீன சந்தை உட்பக்கம், யாழ்ப்பாணம்.

(4049)

## Jaffna College Institute of Technology
### Vaddukoddai

01-01-1993, 10-01-1993 திகதிகளில் ஈழநாதத்திலும் 06-01-1993 ஈழநாடு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட எமது நிறுவன புதிய ஆண்டிற்கான விண்ணப்ப விளம்பரத்தின் முடிவு திகதி விண்ணப்பதாரர்களின் நலன் கருதி 27-01-1993 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சை 03-02-1993 அல்லது 05-02-1993 காலை 9.00 மணிக்கு JCIT அலுவலகம், வட்டுக்கோட்டையில் நடைபெறும். நேர்முகப்பரீட்சை கடிதங்கள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகளும் தவறாது சமுகமளிக்கவும்.

- பணிப்பாளர்

(சி-5842)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரவேங்கை கலைவேந்தன்

(சிவராம்)

[வடிவேலு குணதீஸ்வரன்] (குணம்)

(21. 01. 92இல் மணலாற்று சமரில் வீரச்சாவடைந்தார்)

மண்ணின் மேல் 8-12-1978

மண்ணுக்குள் 21-01-1992

பள்ளிப் பருவத்தில்
துள்ளி விளையாடி - எம்
இதயத்தில் குடியிருந்தாய்
பால் வடியும் முகமது
மாறும் பொழுதுக்குள்
வேங்கையென வீறு கொண்டாய்
பல பல களங்களில்
அணியோடு
நீயும் புலியாய்
மணலாற்றில்
மெழுகானாலும்
எம் மனங்களில் என்றும்
நிலைக்கும் உன்நாமம்
மறப்போமா உன் பாச முகத்தை

கிளிநொச்சி,
தமிழீழம்.

துயருறும்
அக்கா, அத்தான்,
மருமக்கள்

[சி-5811]

...ஆம் ஆண்டு மட்டக்களப்பு - குறிஞ்சாமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

மயூரன் [சி. இராமச்சந்திரன் - வீராடுமுனை, பழுகாமம் - மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - பாவற்கொடிச் சேனையில் எதிர்பாராத விதமாகக் குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த -

சுந்தரம் [மாசிலாமணி திருச்செல்வம் - சின்னமுனைக்காடு - மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட, வந்தாறுமூலை, களுவங்கேணிப் பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1992 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வட்டபோட்டமடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

திவாகரன்-இகக்குலர் [கந்தசாமி யுதன் - கும்புறுமூலை - மட்டக்களப்பு]

நாட்டுப் பற்றாளரான -

இராசா [கறுவாக்கேணி - மட்டக்களப்பு]

திருக்கோணமலை - சலப்பையாறு முகாமிலிருந்து குச்சவெளி நோக்கி ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது இரணைக்கேணிப் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

மேஜர் சிவதாஸ்-அருள்நம்பி [முருகையா சிவானந்தன் - திருக்கோணமலை]

கப்டன் ஜெயன்-பாணன் [நாராயணன் தங்கராசா - நொச்சிக்குளம், சாந்திபுரம் - திருக்கோணமலை]

கப்டன் உதயன்-செங்கதிர் [கண்ணன் இராசேந்திரன் - அட்டன் - மலையகம்]

மணலாறு - கொக்குத்தொடுவாய், கோட்டைக்கேணி முகாமருகில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

கலைவேந்தன்-சிவராம் [வடிவேலு குணதீஸ்வரன் (குணம்) - கந்தர்மடம் - யாழ்ப்பாணம்]

அன்பாளன்-போசன் [பத்மநாதன் பத்மகுமார் - கெருடாவில், தொண்டமானாறு - யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள். சித்தாண்டிப் பகுதியில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

திருக்கோணமலை - மூதூர், சம்பூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 தமிழிளைஞர்கள். இதே தினத்திலிருந்து நான்கு தினங்களாக இம்மாவட்டத்தின் சில கிராமங்களைச் சுற்றிவளைத்திருந்து சுட்டுக் கொல்லப்பட்ட, கிண்ணியா, ஆலங்கேணியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5843)

நீர்வேலி

**கந்தசுவாமி தேவஸ்தான பரிபாலன சபை**

மேற்படி தேவஸ்தான பரிபாலன மகாசபைக் கூட்டம் 31. 01. 1993 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரும் சமூகம் தந்து புது வருடத்திற்குரிய நிர்வாகத்தவர்களை தெரிவு செய்யும்படி வேண்டுகின்றோம்.

முக்கிய அறிவித்தல்:-

உபவிதிப்படி குடும்பத்தலைவர்கள் அங்கத்துவப் பணம் ரூபா 100/- செலுத்தாதவர்கள் 25 01. 1993 க்கு முன்னர் தனாதிகாரி அவர்களிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

நிதி ஆண்டுக் கணக்கு அறிக்கை தேவஸ்தான காரியாலயத்தில் 22. 01. 1993 தொடக்கம் 24 01. 1993 வரை தினமும் பி.ப 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை அங்கத்தவர்கள் பார்வையிடலாம்.

நீர்வேலி. தேவஸ்தான பரிபாலனசபை
18- 01. 1993 காரியக்கமிட்டி

(4110)

# வீர வணக்கம்



தமிழீழ மண்ணின் விடிவுக்காக
தன் இன்னுயிரை ஈய்ந்த தமிழீழ
தளபதி கிட்டு அண்ணாவுக்கும்
அவருடன் சேர்ந்து வங்கக்
கடலில் கரைந்த தியாகச் செம்மல்களுக்கும்

எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்
கொள்கிறோம்.


யாழ்.மாவட்ட விவசாய உற்பத்திவிற்பனை
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின்
சமாசம், யாழ்ப்பாணம் [சி/5838]

# வீர அஞ்சலி

பொங்கும் கடலில் போய் வரவும்
வேங்கைகளுக்கு தடை விதிப்பா?
வங்கக் கடலென்ன இந்தியச் சொத்தா? - அட
ஏங்கும் தமிழருக்கு இப்படியும் இழப்பா?

விழி நீரைச் சொரிகின்ற நம் இதயம்
வேதனையில் வேகின்றது - கரங்கள்
பழி தீர்க்கத் துடிக்கின்றது - அவர்
வழியில் தொடர்கின்றது பாதம் இனிக்
கணப் போதும் ஓய்வதில்லை என்றே

# மரண அறிவித்தல்




**மேஜர் அருணமொழி**
(கௌதமன், நிசாம்)
(சுப்பிரமணியம் சத்தியேந்திரன்)
(திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர்)

திருக்கோணமலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சத்தியேந்திரன் 18-01-1993இல் வீரமரணமடைந்தார். இவர் சுப்பிரமணியம், கமலேஸ்வரியின் அன்பு மகனும், திலகராணி, சுபேந்திரன், கஜேந்திரன், ரவீந்திரன, பாலேந்திரன், சசிகலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகநாதன், நளினி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

49/7 வில்வந்தெரு வீதி, தகவல்
அரியாலை, சு. ரவீந்திரன்
யாழ்ப்பாணம். [4113]

# கண்ணீர் அஞ்சலி



தமிழ் இன விடுதலைக்காக இன்னுயிரை
அர்ப்பணித்த விடுதலை வீரன் மூத்த தளபதி

**கேணல் கிட்டு விற்கும்**
(சதாசிவம் கிருஷ்ணகுமார்) மற்றும்
**லெப். கேணல் குட்டிசிறி**

மேஜர் வேலன் கப்டன் குணசீலன்

# வீர வணக்கம்



**இந்தியத் துரோகத்தின் தொடர்ச்சியில்**
**எமைப்பிரிந்த**
**எங்கள் குருவும் மூத்த தளபதியுமான**

தளபதி கிட்டு அண்ணாவுக்கும்
அவருடன் சேர்ந்து வங்கக்
கடலில் கரைந்த தியாகச் செம்மல்களுக்கும்

எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்
கொள்கிறோம்.

யாழ்.மாவட்ட விவசாய உற்பத்தி விற்பனை
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின்
சமாசம், யாழ்ப்பாணம் (சி/5838)

---

# வீர அஞ்சலி

பொங்கும் கடலில் போய் வரவும்
வேங்கைகளுக்கு தடை விதிப்பா?
வங்கக் கடலென்ன இந்தியச் சொத்தா? - அட
ஏங்கும் தமிழருக்கு இப்படியும் இழப்பா?

விழி நீரைச் சொரிகின்ற நம் இதயம்
வேதனையில் வேகின்றது - அரங்கள்
பழி தீர்க்கத் துடிக்கின்றது - அவர்
வழியில் தொடர்கின்றது பாதம் இனிக்
கணப் போதும் ஓய்வதில்லை என்றே
ஏற்கிறது ஒரு சபதம்.

அகில இலங்கை
வீர சைவ சங்கம்

(4109)

---

## கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்

தமிழ்த்தாயின் மூத்தமகன் எம் இனிய தளபதி **கேணல் கிட்டு** அவர்களுக்கும், அவர்களுடன் வங்கக்கடலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒன்பது போராளிகளுக்கும்

**கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்**




தளபதி "கிட்டுமாமா" தங்கள் வீர மரணம் கேட்டு செயலிழந்துள்ளோம்
"தங்கள் உதிரத்தால் வங்கக்கடல்
செங்கடலானதே"!

"இந்திய அரசே! எம்மவரின் உயிர்மீது உனக்கென்ன விளையாட்டா"?

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம். (சி-5839)

---



தமிழ் இன விடுதலைக்காக இன்னுயிரை அர்ப்பணித்த விடுதலை வீரன் மூத்த தளபதி

**கேணல் கிட்டு விற்கும்**
(சதாசிவம் கிருஷ்ணகுமார்) மற்றும்
**லெப். கேணல் குட்டிசிறி**

| | |
|---|---|
| மேஜர் வேலன் | கப்டன் குணசீலன் |
| கப்டன் ஜீவா | கப்டன் றொசான் |
| கப்டன் நாயகன் | லெப். அமுதன் |
| லெப். தூயவன் | லெப். நல்லவன் |

ஆகியோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகிறோம்.

தாயகத்தை மீட்கும் தாகத்தில் சென்றீர்
மாயவலைக் குட்பட்டு மறைந்து மாவீரரானீர்
தியாகத்தின் திருவுருவாய்—திக்கெட்டும் புகழ்பரப்பி
இதயத்தில் இடம்பெற்றீர் இமயம்போல் வளர்ந்தீரே.

யாழ். மாவட்ட அஞ்சல் திணைக்கள
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

(4014)

---

# கண்ணீர் அஞ்சலி

இந்திய அரசின் நாசவேலைக்கு அடிபணியமறுத்து
நடுக்கடலில் கப்பலைத தகர்த்து
வீரச்சாவைத் தழுவிக் கொண்ட
மூத்த தளபதி

**கேணல் கிட்டு**
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

**லெப். கேணல் குட்டிசிறி**


| | |
|---|---|
| மேஜர் வேலன் | கப்டன் நாயகன் |
| கப்டன் குணசீலன் | லெப் அமுதன் |
| கப்டன் ஜீவா | லெப். நல்லவன் |
| கப்டன் றொசான் | லெப். தூயவன் |

ஆகிய வீரவேங்கைகளிற்கு
எமது அஞ்சலிகள்

குருநகர் சிறகுவலை
கடற்றொழில்
அபிவிருத்திச் சங்கம்

(4111)

---



இந்தியத் துரோகத்தின் தொடர்ச்சியில்
எமைப்பிரிந்த
எங்கள் குருவும் மூத்த தளபதியுமான

# கேணல் கிட்டு

அவர்களுக்கும்
ஏனையவேங்கைகளுக்கும்
எமது வீரவணக்கங்கள் அருச்சுனா

(சி-5840)

---

வங்கக் கடலில் வீரகாவியம் படைத்த வீரவேங்கைகளுக்கு
குருநகர் கடற்றொழில் மக்களின்

# கண்ணீர் அஞ்சலி



இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும்

**எமது வீரஅஞ்சலியை செலுத்துகிறோம்**

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் குருநகர். (4105)

யாழ். நிர்மாண
திணைக்களத்தினரின்

# கண்ணீர் அஞ்சலி

**தமிழீழ தவப்புதல்வன்**
**தளபதி கிட்டுவும்** அவருடன்
இன் உயிர் ஈய்ந்த ஏனைய வீர வேங்கை
களுக்கும் எங்கள்

**கண்ணீர் அஞ்சலியைச்
செலுத்துகின்றோம்**

யாழ். நிர்மாணத் திணைக்கள
அலுவலர்கள்
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
(4106)

கேணல் 'கிட்டுமாமா' உட்பட
பொங்கு கடலில் சங்கமமான
பத்து வேங்கைத் தலைவர்கட்கும்

நாம் உதிர்க்கும்

# ரத்தக் கண்ணீர்!

நெஞ்சில் ஓரிடி நேற்று விழுந்தது
நெஞ்சைப் பிசைந்தது நெருடி நின்றது
பஞ்சபாண்டவர் வாழ்ந்த பாரதம்
வஞ்சமாயெம் வாழ்வை அழித்தது
கொஞ்சமா எம்குரல் வளைகளை
நஞ்சு வைத்தே நெரித்தழித்தபின்
அஞ்சிடாத எம்மரும் புலிகளை
ஆழ்கடலிலும் அழித்தொழித்தது!

கிட்டு மாமனார் கிட்ட நிற்கையில்
எட்ட நின்ற எம் எளிய பகைவர்கள்
வட்டமிட்டவர் வாழ்வழித்திட
திட்டமிட்டவர் திசையை மாற்றியே
கட்டவிழ்தவர் காடைபுரிந்திட
கடலில் வேங்கைகள் வாழும் படகிலோ
கொட்டு மலையிலோர் குண்டு தகரவே
வெட்க இந்தியர் புலிகள் வென்றனர்!

பத்து வேங்கைகள் மொத்தமாகவே
பாழும் கடலிலே மாள நேர்ந்ததே
இந்தியாவினோர் ஈனச் செயலென
ஈழம் முழுவதும் இதயமழுதிடும்
நாளையிங்கு ஒரு நாடு பிறக்கையில்
ஆடுமெம் கொடி ஓடும் கப்பலில்
அன்று நீயெமை வழி மறிக்கையில்
அழியுமுன்கொடி கடலலையிலே!

வீரவேங்கைகளின்
தியாக வேள்வியால் இதயம் கலங்கும்
மூளாய் மக்கள்
(4103)

## நிர்வாக சபை கூட்டம்


(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தின் அவசர ஒருங்கிணைந்த நிர்வாக சபைக் கூட்டம் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு துணைத் தலைவர் திரு. பெ. கனகரெத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் 1988 ஆம் ஆண்டு தை மாதத்திற்குப் பின்னர் சேவையில் இணைந்த ஊழியர்களுக்கு ரூபா 314/- வாழ்க்கைப்படி வழங்கல் சம்பந்தமாகவும் கொடுக்கப்பட்ட சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ளது சம்பந்தமாகவும் தொழிற் சங்கம் என்ன நட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது பற்றி முக்கியமாக ஆராயப்படும். (22)

# சாவிலே சரித்திரம் படைத்தீரோ!




லெப். கேணல்
குட்டி சிறி



## தளபதி கேணல் கிட்டு
[சதாசிவம் கிருஷ்ணகுமார்]

கிட்டு அண்ணா!

விக்ரேஸ்



லெப். கேணல்
குட்டி சிறி



## தளபதி கேணல் கிட்டு
[சதாசிவம் கிருஷ்ணகுமார்]

# கிட்டு அண்ணா!

அன்று கண்முன்னே எங்கள் உடல் சிலிர்க்க நிலத்தையே அதிர வைத்தீர்கள்
இன்று ஏழ் கடலையும் அதிர வைத்து ஈழத்தமிழன் யார் என்பதை உலகறியச் செய்து விட்டீர்கள்
நீங்கள் சாகவில்லை பல ஆயிரம் கிட்டுக்களாக உருவெடுத்துள்ளீர்கள்
கிட்டு அண்ணாவுடன் வீரச்சாவைத் தழுவிய எங்கள் தோழன்

**லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி அவர்களுக்கும்**

ஏனைய எட்டு கடல் புலிகளுக்குப் எங்கள்

**கண்ணீர் அஞ்சலி**

(சி-5831)


**விக்ரேஸ்**
இல. 23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ விக்ரேஸ்**
B. M. C. ஒழுங்கை
யாழ்ப்பாணம்.

**விக்டர் அன் சன்ஸ்**
இல. 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



# வீர வணக்கமும் கண்ணீர் அஞ்சலியும்

## கேணல் கிட்டு

வாய் பிளந்து வந்த வல்லாதிக்கப்
பூதத்தின் வாய் வலைக்குள் வீழாது புலிகளின்
வரலாற்றை மெய்ப்பித்த காவிய நாயகர்கள்

லெப். கேணல் குட்டிசிறி

| | |
|---|---|
| மேஜர் வேலன் | கப்டன் நாயகன் |
| லெப். தூயவன் | கப்டன் குணசீலன் |
| லெப். அமுதன் | கப்டன் றொசான் |
| லெப். நல்லவன் | கப்டன் ஜீவா |




**தமிழகம்**
விற்பனை நிலையம்
நெல்லியடி

**தமிழகம்**
விற்பனை நிலையம்
பருத்தித்துறை

**தமிழகம்**
விற்பனை நிலையம்
உடுப்பிட்டி


(4108)

## சிந்தனைக்கு

இறைவனுக்கு சிறப்பு செய்பவைகள் நம்முடைய ஓலங்கள் அல்ல. — எட்வின் பி. திப்பின்


ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 21-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண் - 05


## படுகொலைக்கு புத்தரின் ஆசி?

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்" இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி கடந்த வார இறுதியில் புத்தகாயாவிற்கு விஜயம் செய்தபோதுஅங்குபேசுகையில்தெரிவித்தார். இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு காணப்பட வேண்டும் என திரு. பிரேமதாசாவுடன் சேர்ந்து வணங்க நாமும் தயாராகவே இருக்கின்றோம். ஆனால், பிரேமதாசாவின் வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தே நாம் அவருடன் சேர்ந்து வணங்க முடியாதவர்களாகவுள்ளோம்.

புத்தகாயாவில் தனது வழிபாடும் வேண்டுதலும் பற்றிக் குறிப்பிட்ட சிறிலங்கா ஜனாதிபதி, 1988 இல் புத்தகாயாவிற்கு விஜயம் செய்தபோது ஜே. வி. பி. யின் வன் செயல்கள் ஒழிய வேண்டும் என வேண்டினேன். அது பலித்தது. தற்பொழுது வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார் - அது நிறைவேறும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புத்தகாயாவில் புத்தபிரானிடம் தான் விடுத்த வேண்டுதலே ஜே. வி. பி. யினர் தோற்கடிக்கப்படுவதற்கு காரணமாகியதென்றால் திரு. பிரேமதாசா புத்தகாயாவிலிருந்த புத்தபிரானிடம் எதை வேண்டினார். அன்பு, கருணை, காருண்யம், கொல்லாமை என்பனவற்றையே தனது தத்துவமாகக் கொண்ட புத்தபிரானிடம் கறுப்பு பூனை என ஒரு கொலைகாரப்படை அமைக்கவும், அதன் மூலம் 60,000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களைக் கொன்றொழிப்பதற்காகவுமா திரு. பிரேமதாசா புத்தபிரானிடம் வேண்டுதல் செய்தார். புத்தபிரான் அதற்கா ஆசி வழங்கினார்.

அதேபோன்று, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீர வேண்டும் என வேண்டுதல் விடுக்கப்பட்டதென்றால், அதுவும் இனப்படுகொலைக்கு அங்கீகாரம் அளிக்குமாறும், இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதி கேட்டுமா திரு. பிரேமதாசா கோரிக்கை விடுத்துள்ளார்.

# புலிகளின் வீரம் புது சரித்திரம் எழுதும் - தளபதி கிட்டு

கேணல் கிட்டு தமிழகத்தில் தங்கியிருந்த போது அங்கிருந்து வெளிவரும் தேவி சஞ்சிகைக்கு அளித்த செவ்வி இது. ஈழமுரசு இதழில் வெளியான இந்தச் செவ்வியை இங்குமறு பிரசுரம் செய்கின்றோம்.

"உங்கள் குடும்பத்தவர்கள்பற்றிகொஞ்சம்சொல்லுங்கள். விடுதலைப் போரில் அவர்களின் ஒத்துழைப்பு எப்படி அமைந்தது?"

எனக்குள் சுதந்திர தாகத்தை வளர்த்ததிலும் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளை எடுத்துச் சொன்னதிலும் எனது அப்பாவும் (சதாசிவம்) அண்ணனும் (காந்திதாசன்) மிக முக்கியமான பங்களிப்பை வழங்கினவர்கள்

"பல வெளிநாட்டு நிருபர்களைச் சந்தித்திருப்பீர்கள். விடுதலைப் புலிகளைப்பற்றி அவர்கள் என்ன சொன்னார்கள்?"

பல விஷயங்கள் அவர்களை வியக்க வைத்திருக்கின்றன. குறிப்பாகப் போரிடும்போது இராணுவத்திடம் அகப்பட்டால் சயனைட் அருந்தி வீர மரணம் அடையும் நமது போராளிகளின் தியாகச் செயலை மிகவும் புகழ்ந்தனர். இயக்கத்துக்கு உதவியவர்கள் எவருமே காட்டிக் கொடுக்கப்படக் கூடாது என்பதற்காகவே இந்த சயனைட்டை போராளிகள் பயன்படுத்துகின்றனர்.

இதுவரை எமது தியாகப் பயணத்தில் 225 க்கு மேற்பட்ட எமது தோழர்கள் சயனைட் சாப்பிட்டு சரித்திரமாகியிருக்கிறார்கள். உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் நடைபெற்றிராத இந்தத் தியாக சாதனை வெளிநாட்டவர்களை வியக்க வைத்ததில் ஆச்சரியமில்லை. இத்துடன் பிளாக் டைகர்ஸ் என்ற தற்கொலைப் படையினரின் வீரப்போரையும் குறிப்பிடலாம்.

புறநானூற்றில் தான் தமிழர் தம் வீரங்களைப் பற்றி கேள்விப்பட்டு அதிசயித்திருக்கிறோம். அதை நடைமுறையில் உலகுக்கு செய்து காட்டிய சமீபகாலத் தமிழனின் வீர மறவப் போராட்டத்தில் புதிய சரித்திரம் எழுதிய புலிகளின் இயக்கம் என்ற விதத்தில் நான் பெருமைப்படுகிறேன்.

"விடுதலைப் புலிகளின் கைகளிலே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தால் அது சர்வாதிகாரத்தனமான போக்குக்கு வழிவகுக்கலாம் என்றெல்லாம் விமர்சிக்கின்றார்களே?',

"அது தவறான விமர்சனம் அடிப்படையே இல்லாதது உண்மையில் நாம் மக்களுடன் பழகும்போது ஆதிக்க மனப்பாங்குடன் அல்லாமல் சகோதர நேசத்துடனேயே அவர்களை அணுகுகிறோம்,

> புறநானூற்றில் தான் தமிழர் தம் வீரங்களைப் பற்றி கேள்விப்பட்டு அதிசயித்திருக்கிறோம். அதை நடைமுறையில் உலகுக்கு செய்து காட்டிய சமீபகாலத் தமிழனின் வீரமறவர் போராட்டத்தில் புதிய சரித்திரம் எழுதிய புலிகளின் இயக்கம் என்ற விதத்தில் பெருமைப் படுகிறேன்.

மேலும் இன்னொரு விளக்கத்தையும் இங்கேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். போராளிகள் என்றாலே முரடர்கள் என்று சிலர் தவறாக நினைத்து விடுகின்றனர். ஆனால் உண்மையிலே மிகவும் மென் இதயம் படைத்தவர்கள் தான் போராளிகளாக மாறுகின்றனர். எனது அப்பாவோ, அண்ணாவோ இராணுவத்தால் பாதிக்கப்படவில்லை. எனினும் நான் இயக்கத்தில் சேர்ந்தேன். காரணம் எனக்கு வேண்டியவர்கள் பாதிக்கப்படாவிட்டாலும் என் இனத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுவதை பார்த்துக் கொண்டு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. மென்மையான இதயம் கொண்டவர்களுக்கு மற்றவர்களின் கவலைகள் தமது சொந்தக் கவலையாகவே தெரியும். இப்படி மற்றவர்களின் கஷ்டங்களையும், வேதனைகளையும் பார்த்து மனம் நெகிழ்ந்து நமது இயக்கத்தில் சேர்ந்தவர்களே அதிகம்.

உங்களுக்குப் பொருத்தப்படும் செயற்கைக் கால் பற்றி ..?

"செயற்கைக்கால் பொருத்துவதென்பது முடிவாகி விட்டாலும் அதன் அமைப்பு, செலவுகள் பற்றிய சரியான தகவல்கள் போகப் போகத்தான் தெரியும். இந்தியாவிலேயே இருக்கும் நவீன செயற்கைக் கால்களில் மிக மிக வசதியான அமைப்புள்ள ஒரு கால் எனக்குப் பொருத்தப்படலாம். பெரும்பாலும் அது அலுமினியத்தால் செய்யப்பட்டதாக இருக்கலாம் எனஎண்ணுகிறேன்"

"அடுத்த கேள்வி... உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியது...!

(சிரித்தவாறே) எதைப் பற்றிக் கேட்கப் போகிறீர்கள் என்பது எனக்குப் புரிகிறது தாராளமாகக் கேளுங்கள்!"

"உங்கள் திருமணம் பற்றி என்ன முடிவெடுத்திருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு பெண்ணுடன் காதல் வயப்பட்டுள்ளதாக அறிந்தோம் திருமணம் நடக்குமா?

"எனக்குப் பிடித்த ஒரு பெண்ணை மனமாரக் காதலிக்கிறேல்

"காதலிப்பது என்பது உங்கள் கடமை உணர்வை சற்றேனும் பாதிக்கவில்லையா?"

"காதல் என்பது கடமையின் கவனத்தைக் கெடுக்கும் என்பது ஒரு தலைப்பட்சமான முடிவு. உண்மையில் காதல் இல்லாமல் வீரம் இல்லை. வீரம் இல்லாமல் காதல் இல்லை. இதை நான் சொல்லவில்லை. தமிழரின் பழம் பெரும் இலக்கிய நூல்களை நீங்கள் எடுத்துப் பார்த்தால் அங்கே வீரமும், காதலும் கைகோர்த்து வளர்வதை நீங்கள் பார்க்கலாம்.

எமது தோழர்களில் காதலை நேசிக்கும் பல இளைஞர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் காதலை மதித்துக் கொண்டே கடமையையும் மனதில் இருத்தி சாவின் விளிம்பு வரை அடிக்கடி சென்று வந்தவர்கள். எம்மைப் பொறுத்த வரை எமது இலட்சியங்களை திசை திருப்புவதற்கு காதலை நாம் அனுமதிப்பதில்லை."

"நீங்கள் எழுத்துத் துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள் என்று அறிந்தோம்..."

"ஆமாம். ஆனால் நானே எழுதுவதை விட மற்றவர்கள் எழுதியதைப் படிப்பதில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு. புதுக்கவிதைகளை நான் நன்கு விரும்பிப்படிப்பேன் குறிப்பாக ஈழத்தில் புதுவை இரத்தினதுரை என்ற புதுமைக் கவிஞனின் கவிதை வரிகள் என்னைக் கவர்ந்தவை. வைரமுத்து, மேத்தா இவர்களின் சமுதாய எழுச்சிக் கவிதைகளும் என்னைப் பெரிதும் கவர்ந்தவை.

நாம் வெளியிட்ட களத்தில் என்ற பத்திரிகையில் பல கட்டுரைகளை நான் எழுதியிருக்கிறேன் போராளிகளின் மனநிலை, பிரச்சினைகள், உணர்ச்சிகள் இவற்றை நேரில் பார்த்தவர் என்ற முறையில் நான் எழுதிய இந்த அனுபவபூர்வமான கட்டுரைகள் பலரால் பாராட்டப் பெற்றவை என்றார் கிட்டு.

## 'கிட்டு' முகம் காணும் நாள் - இனிக் கிட்ட வந்து சேராதோ?

வங்கக்கடல் ஒருமுறை
பொங்கித் தணிந்தது
எங்கள் தமிழீழம் இன்று
ஏங்கித் தவிக்குது.
கங்குல் அகற்றிடக் கதிரவன் தேடிய
எங்கள் தளபதி எங்கே?
அலையெழுந்து கொன்றதுவா
எங்கள் தளபதியை?
புயலெழுந்து வீழ்த்தியதா
பயணித்த கப்பலை?
கிட்டுமாமாவை
கொலையரசு கொன்றது.
இந்திய வெறியரசு வீழ்த்திற்று
புலியணியின்

## ஐரோப்பாவில் தமிழ் அகதிகள் வருகையை தடுக்க முயற்சி

(கொழும்பு)

அடைக்கலம் தேடி வரும் தமிழர்களுக்கு ஊக்குவிப்பு அளிப்பதில்லையென நோர்வே, டென்மார்க் மற்றும் சுவிட்சலாந்து அரசுகளும் முடிவு செய்திருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளான இவை அகதிகள் வருகையை தாமதப்படுத்தத் தவறினால் இவ்வாண்டில் 20,000,—25, 000 வரை தமி

டிய முன் மாதிரியையேமேற்கு ஐரோப்பிய நாடுகள்பின்பற்றி வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுவருகிறது. இந்தியாவிலிருந்து சுமார் முப்பதாயிரம் தமிழ் அகதிகள் கடந்த ஆண்டில் திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே.

## கொடும்பாவி எரிப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து

னால் அலங்கரிக்கப்பட்ட பாடையில் வைத்து பறைசாற்றலுடனும் ஒப்பாரி

இறோம், அதை நடைமுறை கப்படுவதைபார்த்துக் தாராளமாகச் சேனுங்கள்! ... லைகளோத்து வளர்வதை நிப ... ை என்றார் கிட்டு.

புத்தகாயாவில் புத்தபிரானிடம் தான் விடுத்த வேண்டுதலே ஜே. வி. பி. யினர் தோற்கடிக்கப்படுவதற்கு காரணமாகியதென்றால் திரு. பிரேமதாசா புத்தகாயாவிலிருந்த புத்தபிரானிடம் எதை வேண்டினார். அன்பு, கருணை, காருண்யம், கொல்லாமை என்பனவற்றையே தனது தத்துவமாகக் கொண்ட புத்தபிரானிடம் கறுப்பு பூனை என ஒரு கொலைகாரப்படை அமைக்கவும், அதன் மூலம் 60,000 க்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்களைக் கொன்றொழிப்பதற்காகவுமா திரு. பிரேமதாசா புத்தபிரானிடம் வேண்டுதல் செய்தார். புத்தபிரான் அதற்கா ஆசி வழங்கினார்.

அதேபோன்று, தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தீர வேண்டும் என வேண்டுதல் விடுக்கப்பட்டதென்றால், அதுவும் இனப்படுகொலைக்கு அங்கீகாரம் அளிக்குமாறும், இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு அனுமதி கேட்டுமா திரு. பிரேமதாசா கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏனெனில் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் எனத் தெரிவித்துள்ள திரு. பிரேமதாசா, விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கீழே போட வேண்டும், தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் புத்தகாயாவில் வைத்தே அறிவித்துள்ளார். ஆகையினால், இனப் பிரச்சினைக்கு விரைவில் ஒரு இராணுவத் தீர்வு காணப்பட புத்தர் பெருமான் ஆசி வழங்க வேண்டும் என்பதே பிரேமதாசாவின் கோரிக்கையாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை.

ஆனால் ஜே வி. பி. யினரைக் கொன்றொழிப்பதற்கு திரு. பிரேமதாசா கூறுவது போன்று புத்தபிரான் ஒரு போதும் ஆசி வழங்கியிருக்க மாட்டார் அதேபோன்று தமிழர் பிரச்சினைக்குஓர் இராணுவத் தீர்வு காண்பதற்கு புத்த பிரான் ஆசி வழங்க மாட்டார். நோய், மூப்பு, பிணி என்பவற்றால் மக்கள் படும் துயர்கண்டு தமது அரசுரிமையையே துறந்து வந்த புத்தபிரான் அரசியலில் தனது அதிகாரத்தை நிலை நாட்டவும், ஆதிக்கத்தைப் பலப்படுத்தவும் ஒருபோதும் திரு. பிரேமதாசாவிற்கு அருள்பாலிக்க மாட்டார். அவ்வாறு அருள்பாலிப்பதானால் கௌதம புத்தரின் தத்துவமே தலைகீழாகிவிடும்.

ஆனால், திரு. பிரேமதாசா போன்ற வேடதாரிகள் பௌத்தத்தின் பேரில் எதையும் செய்ய வல்லவர்கள். புத்தரின் பெயரால் பஞ்சமா பாதகங்களையும் செய்யத் தயங்காதவர்கள், ஆனால் பௌத்தத்தின் பெயரால் ஜே. வி. பி யினரை அடக்கியது போன்று விடுதலைப் புலிகளையும், தமிழர் தேசிய இனப் போராட்டத்தையும் பிரேமதாசா அரசால் அடக்கி விட முடியாது. ஏனெனில் புலிகள் ஜே. வி. பி. போன்றவர்கள் அல்ல.

இன்று தமிழீழம் என்பது தமிழரின் உயிர் மூச்சாக மாறி விட்டது. தமிழீழம் அல்லது வீரச்சாவு என்ற உணர்வு பல்லாயிரக்கணக்கானோர் மனங்களில் ஊறி விட்டது. இவர்களினால் புலிகளின் தலைமைத்துவமும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது. இதனை தளபதி கேணல் கிட்டுவின் மறைவிற்கு கடந்த சில தினங்களாக மக்கள் செலுத்திய அஞ்சலியே உணர்த்தப் போதுமானதாகும்.

## 'கிட்டு' முகம் காணும் நாள் - இனிக் கிட்ட வந்து சேராதோ?

வங்கக்கடல் ஒருமுறை
பொங்கித் தணிந்தது
எங்கள் தமிழீழம் இன்று
ஏங்கித் தவிக்குது.
கங்குல் அகற்றிடக் கதிரவன் தேடிய
எங்கள் தளபதி எங்கே?
அலையெழுந்து கொன்றதுவா
எங்கள் தளபதியை?
புயலெழுந்து வீழ்த்தியதா
பயணித்த கப்பலை?
கிட்டுமாமாவை
கொலையரசு கொன்றது.
இந்திய வெறியரசு வீழ்த்திற்று
புலியணியின்
சர்வதேசப் பணிபுரியக் கடல் கடந்தவன்.
தேசத்தில் தொலைந்து போன
அமைதி தனைத் தேடி,
தாய்நிலம் வருகையில்,
தமிழீழம் வருகையில்
பாரதம் சதிசெய்தது.
கிட்டுவுடன் பத்துப்பேரை சாகடித்தது
பாரதம்
பிடிக்க முயன்றது கிட்டுவின் கப்பலை
புலிகள் வெடித்திட வைத்தனர்
தம்மை அழித்தமே வென்றனர்
தலை குனிந்தது தோற்றது பாரதம்.
தரணியெங்குமே - பாரதப்
புரளி அம்பலம் ஆனது கண்டோம்.
மனமிடிந்து வாடுகிறோம்.
விழிகறந்து பாடுகிறோம்.
பூகம்பமா கடலில் தணிந்து போனது? தமிழ்த்
தேகங்களா கடலில் தமையழிந்தன?
நெஞ்சினை மிஞ்சிவிட்ட
வேதனையே தணியாயோ?
'கிட்டு' முகம் காணும் நாள் - இனிக்
கிட்டவந்து சேராதோ?
தொட்டிலாம் தமிழீழம் இனித்
தன் மகனாம் 'கிட்டு'தனை
தோள்களிலே தாலாட்டாதோ?
அமைதிக்குக் குண்டு வைக்கும் இந்தியாவே!
எம் தளபதிகளுக்கு
ஏன் வழிமறிக்கிறாய்? குழிபறிக்கிறாய்?
தணல்களை ஏன் தலை தனிற் கொள்கிறாய்?
புலிகளுக்கு மூத்த உறுப்பினராய்,
பிரபாகரனுக்குத் துணையாய்,
சிங்களப் படைகளுக்குப் பயத்தின் உருவாய்,
களத்தில் புயலாய்,
கேணல் 'கிட்டு' நின்றான்
இன்று எங்கு போனான்?
என்ன சொன்னான்?, என்ன செய்தான்?,
மற்றவர்கள் என்ன ஆனார்?
சீக்கிரம் வா கடலலையே!
'கிட்டு' பற்றி எங்களுக்கு
கிட்ட வந்து கூறிவிடு. சீக்கிரம் வா!

o o o

- இளந்திரையன்

# ஐரோப்பாவில் தமிழ் அகதிகள் வருகையை தடுக்க முயற்சி

(கொழும்பு)

அடைக்கலம் தேடி வரும் தமிழர்களுக்கு ஊக்குவிப்பு அளிப்பதில்லையென நோர்வே, டென்மார்க் மற்றும் சுவிட்சலாந்து அரசுகளும் முடிவு செய்திருப்பதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

மேற்கு ஐரோப்பிய நாடுகளான இவை அகதிகள் வருகையை தாமதப்படுத்தத் தவறினால் இவ்வாண்டில் 20,000,—25,000 வரை தமிழர்கள் தமது நாடுகளுக்கு வந்து சேரலாம் என்று அச்சம் கொண்டுள்ளனவாம். இதனால் கொழும்பில் உள்ள தமது தூதுவரகங்களுக்கு கட்டுப்பாடான உத்தரவுகளை பிறப்பித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்திய அரசாங்கம் காட்டிய முன்மாதிரியையேமேற்கு ஐரோப்பிய நாடுகள்பின்பற்றி வருவதாகச் சுட்டிக் காட்டப் பட்டுவருகிறது. இந்தியாவிலிருந்து சுமார் முப்பதாயிரம் தமிழ் அகதிகள் கடந்த ஆண்டில் திருப்பி அனுப்பப்பட்டது தெரிந்ததே.

# கொடும்பாவி எரிப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளது வீரச்சாவிற்கு காரணமாக இருந்த இந்தியாவின் வஞ்சக செயலிற்கு கண்டனம் தெரிவிக்குமுகமாக குடாநாட்டில் தொடர்ந்து நேற்றும் கொடும்பாவி எரிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

நேற்று மாலை 4-00 மணியளவில் கல்வியங்காடு பகுதியில் இருந்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழீழத்துரோகி தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரது கொடும்பாவிகளை அப்பகுதி மக்கள்மற்றும் கல்வியங்காட்டுச் சந்தை வியாபாரிகள், ஆகியோரினால் வெள்ளை, நீல நிறங்களினால் அலங்கரிக்கப்பட்ட பாடையில் வைத்து பறைசாற்றலுடனும் ஒப்பாரி அழுகுரலுடனும் கண்டன சுலோகங்களை ஏந்தியவாறும் கல்வியங்காட்டுச் சந்தியில் இருந்து பருத்தித்துறை வீதியால் எடுத்துச் செல்லப்பட்டு வைமன் வீதியை அடைந்து, நாவலர் வீதி, கோவில் வீதி, ஊடாக சர்வதேச செஞ்சிலுவையை அடைந்தது. அங்கு கொடும்பாவியைத் தாங்கி வந்த மக்கள் கோஷங்களை எழுப்பியும், ஒப்பாரி செய்தும் அவ்விடத்தில் சூழ்ந்து நின்று இரண்டு கொடும்பாவிகளையும் தகனம் செய்தனர். (பா)

சன நெரிசல்

ரும் கண்டனப் பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலினால் 25 க்கு மேற்பட்டோர் மயக்கமடைந்தனர். இவர்களில் அநேகர் பெண்களாவர். இவர்களுக்குச் சென்ஜோன்ஸ் படையினர் முதலுதவிச் சிகிச்சை வழங்கினர்.

மலர்

தலைவர் வே. பிரபாகரன் ஆறுதல் கூறினார்.

இதற்குமுன்னர் திருவில்திடலுக்கு கேணல் கிட்டுவின் தாயாரானசீதாலெட்சுமியும், அவரது மனைவியான சிந்தியாவும், சகோதரரும் ஏனைய ஒன்பது மாவீரர்களின் குடும்பத்தினரும் அழைத்துவரப் பட்டிருந்தனர்.

இதன்பின்னர் தலைவர் பிரபாகரன், கேணல் கிட்டுவினது தாயாரையும், மனைவியையும் சந்தித்து ஆறுதல் கூறியதோடு, ஏனைய மாவீரர்களினதும் குடும்பத்தினரையும் சந்தித்து ஆறுதல் கூறினார்.

கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களினதும் 'நினைவுக்கல்' திருவில் திடலில் கேணல் கிட்டுவின் தாயாரால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை, தளபதி கேணல் கிட்டுவிற்கும், வீரமரணமடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதற்காகக் குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்துவந்த லட்சக்கணக்கான மக்கள் திருவில் மைதானத்தில் நிறைந்திருந்தனர்.

பிரபாகரனின்

பிரிட்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளும் கிட்டு விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டு இந்தியா மீது பெரிதாக அழுத்தம் எதுவும் போடத் தயாராகஇருக்கவில்லைஅவை என்றார்.

கிட்டுவைக் காப்பாற்றுமாறு விடுதலைப் புலிகளின் சர்வதேச பணியகம் விடுத்த வேண்டுகோளுக்கு இந் நாடுகள் செவி சாய்க்கவில்லை. இதில்எங்களுக்குகவலைஎன்ன என்றால் கிட்டு கொண்டு வந்த சமாதான திட்டத்தை முன் மொழிந்த நாடுகள் அதாவது குவேக்கஸ் சமாதானக் குழுவை அனுப்பிய பிரிட்டன் போன்ற நாடுகள் இதில் மௌனம் சாதிப்பது என்றார்.

இதேவேளை, இந்திய அரசாங்கம் ஆயுதப்போராட்டம் ஒன்றின் மூலம் தமிழீழம் உருவாகிவிடுமோ என அஞ்சுகின்றது. இதனால் இந்திய சாம்ராச்சியம் குலைந்துவிடும் என அஞ்சுகிறதுஅதாவது, இந்தியாவில்நடைபெறும் விடுதலைப் போராட்டங்களை விட விடுதலைப் புலிகள் நடத்தும் தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து இந்தியா அஞ்சுகிறது. இதற்கு புலிகளின் தியாகம் அர்ப்பணிப்பு என்பவையே காரணமாகும்.

இந் நிலையில் புலிகளை நசுக்க வேண்டும். உறுதிமிக்க விடுதலைப்புலிகளின் தலைமையையும் தளபதிகளையும் அழிக்க வேண்டும் என இந்தியா எண்ணுகின்றது. பாகிஸ்தானிடம்உள்ள அணுகுண்டை விட பிரபாகரனின் மனவுறுதிக்கு இந்தியா அஞ்சுகின்றதென்றார்.

உலகில் எத்தனையோ ஒடுக்கப்பட்ட மக்கள் இனம்; மிகவும் மிருகத்தனமாக நசுக்கப் பட்ட மக்கள் இனம்; நீதி கேட்டு போராடும் மக்கள் இனம் இவற்றிற்கு நீதி வழங்குவது அவர்களின் தார்மீகப் போராட்ட அடிப்படையின்றி வேறில்லை. நாங்கள் தர்மத்தின் அடிப்படையில், தார்மீகத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில் ஒரு போரை நடத்துகின்றோம். இந்த சத்தியம்தான் வரலாற்றுச்சக்தி, இந்த சத்தியம் தான் மனித வரலாற்றை நகர்த்தும் அற்புதசக்தி, இந்த ஆன்மீக அடிப்படையில் தார்மீக அடிப்படையில் எடுத்துச் செல்லப்படும் போராட்டம் எத்தனை அநீதிகள் வந்தாலும், சக்திகள் வந்தாலும் இறுதியில் வெற்றி நமக்கே என்றார்.

ஈழநாதம்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து

# வாழப்பாடியை நீக்குமாறு அ. தி. மு. கவினர் வற்புறுத்து

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியை தலைவர் பதவியிலிருந்து நீக்கினால் மட்டுமே காங்கிரஸ் - அண்ணா தி.மு.க உறவு தொடரும் என அண்ணா தி.மு.க அமைப்புச் செயலாளரும் மாநில அமைச்சருமான கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

ராஜீவ்காந்தி சிலை திறப்பு விழாவிற்கு காங்கிரஸ் தொண்டர்கள் செல்வதை அண்ணா தி.மு.க.வினர் தடுத்து வருவதாகவும், எனினும் ராஜீவ் காந்தி சிலை திறப்பு விழாவிற்கு பெருமளவு காங்கிரஸ் தொண்டர்கள் கலந்துகொண்டது அ.தி.மு.கவினருக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் வாழப்பாடி இராமமூர்த்தி பத்திரிகை ஒன்றிற்கு தெரிவித்ததாக வெளிவந்த செய்தியே கூட்டணியின் உறவில் பெரும் பிளவையும், வாழப்பாடிக்கு எதிராக இவ்வாறு கருத்து வெளியிடவும் காரணமாக அமைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி தொடரும் என பி.வி. நரசிம்மராவ் கூறிய பின்னரும் அ.தி.மு.க அமைப்புச்செயலாளர் கண்ணப்பனின் இவ்வறிக்கை அ.தி.மு.க இனி மேல்பாரதீயஜனதா கட்சியை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளதையே காட்டுகிறது எனவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## சகல பனை, தென்னை தொழில் வல்லுனர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றிலிருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும் அந்தந்தப்பகுதித் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமானதாகும். ஆகவே நீங்கள், உங்கள் பகுதிகளிலுள்ள மேற்படி சங்கங்களோடு உடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுத் தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிடடுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். அனுமதியற்ற இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வலிகாமம் கொத்தணி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01. | கல்/அள/மல். | தெ. | ப. | உ. | வி. | கூ. சங்கம் |
| 02 | தெல்லிப்பழை | ,, | ,, | ,, | ,, | ,, |
| 03. | பண்டத்தரிப்பு பரிஷ் | ,, | ,, | ,, | ,, | ,, |
| 04. | மானிப்பாய் பரிஷ் | ,, | ,, | ,, | ,, | ,, |
| 05. | வட்டுக் தொகுதி | ,, | ,, | ,, | ,, | ,, |
| 06. | கோண்டாவில் பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். | | | | | |

(சி-5835)

## அரசியல் தீர்வே தேவை

சிறிலங்காவின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டுமென்று மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவரான தினேஷ் குணவர்த்தனா தமது கட்சிக் காரியாலயத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பல நோக்கு கூட்டுறவுச்சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ். மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் சபையின் தலைவர் திரு. வை செந்திநாதன் தலைமையில் நடைபெறும். [22]

## பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மறைந்த மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளுக்குமான அஞ்சலிக் கூட்டம் நேற்றுக்காலை பத்து முப்பது மணியளவில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் நீ இரவிந்திரதாசன் தலைமையில் நடைபெற்றது

## ஆசிக்குளம் தாக்குதல்; படை மத்தியில் அதிர்ச்சி

(கொழும்பு)

அண்மையில் வவுனியாவிற்கு அருகேயுள்ள ஆசிக்குளம் பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ஆறு பொலிசாரும், ஒரு உதவியாளரும் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் இப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் எப்படி நுழைந்தார்கள், தாக்குதலை நடத்திவிட்டு எப்படி மறைந்தார்கள்? என்பது போன்ற கேள்விகளுக்கு பதில் கிடைக்காத நிலையில் பாதுகாப்பு படையின் உயர் பீடம் திணறுவதாகவும், இத் தாக்குதலின் மூலம் வவுனியா நகரம் படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக அரசு கூறிவந்தது பொய்யாக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக உயர்மட்ட இராணுவ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள

## ஏனைய பொலிசாரையும் விடுவிக்க முயற்சியாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் ஏனைய பொலிசாரையும் விடுவிப்பதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசாங்கம் முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. அமைச்சர் வின்சன்ட்பெரேரா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசும்போது இத்தகவலைத் தெரிவித்தார்.

## வடபகுதி உணவு மோசடி

கிளிநொச்சியில் நேற்று

# மாபெரும் எழுச்சி ஊர்வலம்; கதவடைப்பு, கண்டன கூட்டம்

[கிளிநொச்சி]

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவிற்கும் ஏனைய ஒன்பது போராளிகளுக்கும் மரியாதை செலுத்தும் முகமாக நேற்று கிளிநொச்சியில் மாபெரும் எழுச்சி ஊர்வலமும் கண்டனக் கூட்டமும் பூரண கடையடைப்பும் இடம்பெற்றது.

நேற்றுக்காலை கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலடியில் இருந்து ஆரம்பமாகிய ஊர்வலம் கிளிநொச்சி பஸ்நிலையம் வரை இடம்பெற்றது. இவ் ஊர்வலத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்திய அரசிற்கும் ஜெயலலிதாவிற்கும் எதிரான கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர்.

நரசிம்மராவினதும் ஜெயலலிதாவினதும் கொடும்பாவிகள் இவ் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு அவை எரியூட்டப்பட்டன.

இங்கு நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் உரையாற்றிய வன்னி மாவட்டஅரசியல் நிர்வாக பொறுப்பாளர்மனோகரன் "இந்திய அரசாங்கம்எமக்கு இதுவரை நான்கு பிரமாண்டமான துரோகங்களை இதுவரை செய்துள்ளது. அதன் உச்ச கட்டமாகவே தளபதி கிட்டு உட்பட பத்து பேரை மரணமடையச் செய்தது. இத் துரோகத்தை தமிழீழ மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். எத்தகைய துரோகங்களுக்கும் மத்தியிலும், இன்னல்களுக்கு மத்தியிலும் நாம் எமது போராட்டத்தை முன்னெடுத்து செல்வோம்" என்றார்.

# தமிழீழமெங்கும் நேற்று பூரண ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் வீரச்சாவிற்குக் காரணமான இந்திய அரசின் கொடூரச் செயலைக் கண்டித்து நேற்றுத் தமிழீழமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவலாக இந்திய அரசின் நயவஞ்சகச் சூழ்ச்சியைக் கண்டித்து நடைபெற்ற வெகுஜனக்கண்டன ஊர்வலத்திற்கு ஆதரவு தெரிவித்து குடாநாடு முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

பாடசாலைகள் இயங்கவில்லை. கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. வீதிகளில் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டு மறைந்த வேங்கைகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மலர்வழிபாட்டில் மக்கள் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

# தளபதிகள் தமது வீரத்தை எம்மிடமே விட்டுசெல்கின்றனர்

## விசேட தளபதி தமிழ்ச்செல்வன்

"எமது தளபதிகள் எம்மை விட்டு போகும் போது அவர்களுடைய வீரத்தையும், உறுதியையும் போராட்ட உத்வேகத்தையும் விட்டுவிட்டுத்தான் செல்கிறார்கள் அதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும் அவர்கள் நினைக்கின்ற மாதிரிஎமதுபோராட்டம் இல்லை என" யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மூத்த தளபதி கிட்டு உட்பட பத்து மாவீரர்களுக்கு மரியாதை செலுத்த வென நேற்று திருவிலில் நடைபெற்ற கூட்டத்தில உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் இடம்பெற்ற இக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன், மாவீரர் பணிமனைப பொறுப்பாளர் பொன்தியாகம், யாழ். மாவட்ட விசேட தளபதி புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

"கேணல்கிட்டுவின் மரணம் என்பது ஒரு சர்வதேச பரிணாமம் பெற்ற ஒரு விடயமாக மாறிவிட்டது உலகெங்கும் உள்ள ஆர்வமுள்ள மக்கள் கேணல் கிட்டுவுக்கு என்ன நடந்தது? என்ன பிரச்சினை? எந்த வடிவத்தில் நடக்கிறது என்பது குறித்து அவதானமாக வினாக்களை தருவித்து துருவிக் கேட்டு அறியமுயல்கின்றனர் அவருடைய மரணம் சர்வதேசத்தில் ஒரு புதிய பரிணாமத்தை கொண்டதாக அமையப் போகிறது" என விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமார் அங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.

"எமது மூத்த தளபதியின் வீரச்சாவு நிகழ்வு எமது விடுதலையின் சரித்திரத்தில் உறைந்த நிகழ்வாக இருக்கிறது. முற்றிலும் வேறுபட்ட நிகழ்வு தான் இது இந்த மாவீரர்களை சண்டை கொன்றது பாரதம். எமது போராளிகளின் திறமிகு போராட்டத்தின் முன்னால் தோற்று ஓடியபாரதம்சந்தர்ப்பம்பார்த்து இன்றுசதிசெய்து விட்டது." இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா தெரிவித்தார்.

"இந்த மண்ணிற்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்த இராமர்கள் மிகப்பெரிய கோழைகள் கடற்பரப்பிலே தன்னந்தனியனாக நின்ற கிட்டண்ணாவைச் சுற்றி வளைத்தபோது என்ன நினைத்திருப்பார். கோழைகள் என்று எண்ணிச் சிரித்திருப்பார்" என இங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் பிரமுகர் யோகி அவர்கள் தெரிவித்தார்.

"இந்தியாவின் அச்சுறுத்தலுக்காக இந்தக் கடற்பிராந்தியத்தில் எமது நடவடிக்கையை கைவிட முடியாது. ஏனெனில் இந்தக் கடற்பரப்

தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக் கொள்ளும்படியும் இதனால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வலிகாமம் கொத்தணி

01. கள்/அள/மல். தெ. ப. உ. வி. கூ. சங்கம்
02. தெல்லிப்பழை ,, ,, ,, ,,
03. பண்டத்தரிப்பு பரிஷ் ,, ,, ,, ,,
04. மானிப்பாய் பரிஷ் ,, ,, ,, ,,
05. வட்டுக்கோட்டை தொகுதி ,, ,, ,, ,,
06. கோண்டாவில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

(சி-5835)


# எழுதுவினைஞர் சேவை

ஜனவரி 30 இல் நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: இன்று 21-01-1993 3.00 மணி

வகுப்புகள் அனுபவம்மிக்க ஆசிரியர்களால் தொடர்ந்து 9 நாட்கள் நடத்தப்படும்.

கட்டணம் 150/- மட்டுமே

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd CROSS STREET, JAFFNA.

(சி-5848)


# மரண அறிவித்தல்

## குமரேசு கணநாதன்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குமரேசு கணநாதன் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், இலங்கை விமானப்படை, மீன்பிடிக் கூட்டுத்தாபனம்) நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற குமரேசு - சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், சாந்தகுணதேவியின் அருமைக் கணவரும், குமரேஸ்வரநாதன் (பிரான்ஸ்), குகநாதன் (பிரான்ஸ்), சாந்தா பத்மலிங்கம், வீரமரணமடைந்த குணநாதன் (கப்டன் இன்சூர்), குமரேஸ்வரன் (நோர்வே), சாரதா, குகதாசன் (கவீடன்), குணசீலன், கமலதாசன் ஆகியோரின் பாசத்தந்தையும், பத்மலிங்கம் (கணக்காளர், கொழும்பு குமுதா (பிரான்ஸ் ஆகியோரின் அன்பு மாமனும், பத்மராஜ், ஹேமராஜ் ஆகியோரின் ஆசைப் பேரனும் காலஞ்சென்ற பரஞ்சோதியம்மா சிவபாதசுந்தரம் (கொழும்பு றோயல் கல்லூரி முன்னாள் ஆசிரியர் - கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (21.01 1993 பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கழுவைகயாறு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

உற்றார் உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

''குமரபதி''
சிவன்கோவிலடி,
வட்டுக்கோட்டை:

தகவல்:
மனைவி

(4118)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் இப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் எப்படி நுழைந்தார்கள், தாக்கப்பட்டது என கொழும்பு அரசு கூறிவந்தது பொய்யாக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக உயர்மட்ட இராணுவ விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# ஏனைய பொலிசாரையும் விடுவிக்க முயற்சியாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் ஏனைய பொலிசாரையும் விடுவிப்பதற்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசாங்கம் முயற்சி மேற்கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. அமைச்சர் வின்சன்ட்பெரேரா நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் பேசும்போது இத்தகவலைத் தெரிவித்தார்.

# வடபகுதி உணவு மோசடி 50 அதிகாரிகள் விசாரணை

(கொழும்பு)

வடபகுதிக்குஅனுப்பப்பட்ட உணவுப் பொருட்களின் மோசடி குறித்து இதுவரை ஐம்பதிற்கும் அதிகமான அரசாங்க அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் இரகசியப் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதிக்குஅனுப்பப்பட்ட பலகோடி ரூபா பெறுமதியான உணவுடபொருள்களின் மோசடிகுறித்து முக்கிய நபர்கள் சிலர் வெகுவிரைவில் கைது செய்யப்படவுள்ளதாகவும், அவர்களின் பெயர்களை தற்போது வெளியிடமுடியாது எனவும் இரகசியப் பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து உணவுப்பொருள்களையாழ்ப்பாணத்தில் கையேற்ற அதிகாரிகளும் பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப்படவுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து சில ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளவும் சிறிலங்கா இரகசியப்பொலிசார் தீர்மானித்துள்ளதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

## தலைவரை

அதனைவிட உங்கள் மகனுடைய வீரச்சாவு சாதாரணமான நிகழ்வல்ல என்று எனக்கு ஆறுதல் கூறினார்'' என கடற்புலி கப்டன் குணசீலனின் தாயார் திருமதி லூர்தம்மா தெரிவித்தார்.

## மூதூர்

காலை 10 மணியளவில் ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் பிற்பகல் இரண்டு மணிவரை இடம்பெற்றது

# எழுதுவினைஞர் பரீட்சை 30 ஆம் திகதி நடைபெறும்

அரசாங்க மற்றும் இளைஞர் சேவைகளுக்கான எழுதுவினைஞர்களை ஆட்சேர்த்துக் கொள்ளும் பரீட்சை எதிர்வரும் 30 திகதி நாடு முழுவதிலும் உள்ள ஆயிரத்து இருநூறு பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு ஓர் இலட்சத்து அறுபதாயிரம் பரீட்சாத்திகள் தோற்ற இருக்கின்றனர். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ள சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுமதி அட்டைகள்தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் எவருக்காயினும் 25 ஆம் திகதிக்குள் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் ஆதர்வெதமுல்ல தெரிவித்துள்ளார். அவர்களுக்கு பதிவு இலக்கம் உட்பட தேவையான தகவல்கள் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். மேலும் யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் 'குமண' கப்பலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (பா)


# வெற்றிடங்கள்

## உதவி ஆசிரியர் / ஒப்புநோக்குநர்

மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதால் தகுதியானவர்கள் சுயவிபரங்களுடனும், அனுபவச் சான்றிதழ்களுடனும் 25 1 93 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

ஈழநாதம்
31, மகேந்திரா வீதி.
யாழ்ப்பாணம்.


கத்தையும் விட்டுவிட்டுதான் செல்கிறார்கள் அதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும் அவர்கள் நினைக்கின்ற மாதிரிஎமதுபோராட்டம் இல்லை என'' யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

மூத்த தளபதி கிட்டு உட்பட பத்து மாவீரர்களுக்கு மரியாதை செலுத்தவென நேற்று திருவிலில் நடைபெற்ற கூட்டத்தில உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் இடம்பெற்ற இக் கண்டனப் பொதுக்கூட்டத்தில் கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன், மாவீரர் பணிமனைப பொறுப்பாளர் பொன்தியாகம், யாழ். மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே. பாலகுமார். விடுதலைப் புலிகள் மகளிர் அணி துணைப்பொறுப்பாளர் ரதி, கலைபண்பாட்டு கழக துணைப் பொறுப்பாளர் தேவர் அண்ணா, விடுதலைப் புலிகள் பிரமுகர் யோகரட்ணம் யோகி, தமிழீழ கடற்புலிகளின் விசேட தளபதி சூசை. விடுதலைப் புலிகள் பரமுகர் பரா, மட்டு-அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா, விடுதலைப் புலிகளின் மரணம் என்பது ஒரு சர்வதேச பரிணாமம் பெற்ற ஒரு விடயமாக மாறிவிட்டது உலகெங்கும் உள்ள ஆர்வமுள்ள மக்கள் கேணல் கிட்டுவுக்கு என்ன நடந்தது? என்ன பிரச்சினை? எந்த வடிவத்தில் நடக்கிறது என்பது குறித்து அவதானமாக வினாக்களை துருவித் துருவிக் கேட்டு அறியமுயல்கின்றனர் அவருடைய மரணம் சர்வதேசத்தில் ஒரு புதிய பரிணாமத்தை கொண்டதாக அமையப் போகிறது'' என விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே.பாலகுமார் அங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.

''எமது மூத்த தளபதியின் வீரச்சாவு நிகழ்வு எமது சரித்தத்தில் உறைந்த நிகழ்வாக இருக்கிறது. முற்றிலும் வேறுபட்ட நிகழ்வு தான் இது இந்த மாவீரர்களை சண்டையிலே இழந்திருந்தால் நாம் கலங்கியிருக்க மாட்டோம். ஆனால் இந்தியாவின் வஞ்சகத்தீயிலே இவர்களை இழந்தமையால் எமது உள்ளங்கள் கொந்தளிக்கின்றன'' என விடுதலைப் புலிகளின் மகளிர் அணி துணைப் பொறுப்பாளர் ரதி உரையாற்றும் போது தெரிவித்தார்.

''பாரதம் மீண்டும் பாதகம் செய்து விட்டது இந்த மண்ணிலே தமிழீழ விடுதலைப் போராட்டம் தலையெடுத்த போது விடுதலைப் போராட்டத்திற்கு உதவிசெய்கிறோம் என்ற பேரில் துரோகக் கும்பல்கள் பலவற்றை அனுப்பி பயிற்சி கொடுத்தது பாரதம். அமைதிப்படை என்றபேரிலே எமது மண்ணிலே தனது வல்லாதிக்க பாதங்களை பதித்துக் கொண்டது பாரதம். திலீபன் உண்ணாவிரதம் இருந்தபோது வேண்டுமென்றே திலீபனை சாகடித்தது பாரதம். எமது மூத்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவர் மரணத்திற்கு காரணமாக இருந்தது பாரதம். தளபதி ஜொனியை கானகத்தில் வைத்து நயவஞ்சகமாக படுகொலை செய்யத் திட்டமிட்டு ... பம்பார்த்து இன்றுசதிசெய்து விட்டது.'' இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா தெரிவித்தார்.

''இந்த மண்ணிற்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்த இராமர்கள் மிகப்பெரிய கோழைகள் கடற்பரப்பிலே தன்னந்தனியனாக நின்ற கிட்டண்ணாவைச் சுற்றி வளைத்தபோது என்ன நினைத்திருப்பார். கோழைகள் என்று எண்ணிச் சிரித்திருப்பார்'' என இங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் பிரமுகர் யோகி அவர்கள் தெரிவித்தார்.

''இந்தியாவின் அச்சுறுத்தலுக்காக இந்தக் கடற்பிராந்தியத்தில் எமது நடவடிக்கையை கைவிட முடியாது. ஏனெனில் இந்தக் கடற்பரப்பின் தேவை எமக்கு உள்ளது. விரைவில் இந்த கடற்பரப்பில் இந்தியாவின் வல்லாதிக்கத்தை உடைத்தெறிவோம்'' என கடற்புலிகளின் விசேட தளபதி சூசை அவர்கள் தெரிவித்தார்

''எமது போராட்டத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வரவேண்டிய சூழ்நிலை எங்கள் அனைவருக்கும் இருக்கிறது கடந்த வருடம் சிறிலங்கா படையினர் பாரிய இழப்புகளை சந்தித்த நிலையில் மனநிலை குழம்பிய நிலையில் சிறிலங்கா அரசின் கூலிப்பட்டாளங்கள் படை முகாம்களிலிருந்து ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுக்க அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் எமது தளபதியின் இழப்பைக் கண்டு சோர்ந்துவிடாமல் எதிரியின் மனநிலையைப் புரிந்துகொண்டு தலைவரின் வழிகாட்டலில் தீவிரமாகப் போராட வேண்டும்'' என மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் விசேட தளபதி கருணா தெரிவித்தார்.

## வேலை வாய்ப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தேசிய தொழிற் பயிலுனர் சபையுடன் இணைந்து 14 பேருக்கு எழுதுவினைஞர் வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது. ஒவ்வொரு அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குரிய வேலை வாய்ப்பினை அவ்வப் பிரதேச உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வழங்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. (42)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

20- 01- 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8078

வட பகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

26 5870, 43-1019, 24-9758, 24-6699, 28-8444.
24-6972, 24-1685, 26-6775, 28-2342, 40-9188
22-4862, 27-5197, 28-1111, 26-1169, 26-3183.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
இல்லை